# சோகச் சுழல்

★

ஆசிரியர்:

சி. பி. சிற்றரசு

★

இராஜன் பதிப்பகம்,
மேட்டுப்பாளையம்,
முசிரி தாலூகா, :—: திருச்சி ஜில்லா.

இராஜன் வெளியீடு 2
முதல் பதிப்பு 1951
பிரசுர உரிமை பெற்றது

விலை எட்டணா

ஸ்டார் பிரஸ், துறையூர்,
திருச்சி ஜில்லா.

# சோகச் சுழல்

★★

ஒருவள் வாழ்க்கை எவ்வளவு சுழன்றேடுகிறது என்பதை சித்தரிக்கிறது இச் சிறு நூல். மாலா — மணி, மனோகரன், மருதாசலம், மாணிக்கவாசகம், நீதிபதி, வக்கீல்கள், படகோட்டி ஆகியோரைச் சுற்றித்திரிகிறது இந்தக்கதை.

உண்மையான குற்றவாளி யார் என்பதை முடிவுகட்டித் தீரவேண்டும் என்ற வேகத்தில் தள்ளப்படுகிறோம்.

'அபாயப்பாலம்' என்ற பெயரோடு நெடுநாட்கள் மின்னிக்கொண்டிருந்த இந்த பெயர் இன்று **'சோகச் சுழல்'** என்ற பெயரோடு அன்பர் ராசு அவர்கள் முயற்சியால் வெளியேறுகிறது.

வணக்கம்.

சேலம். **சி. பி. சிற்றரசு**

ஒரு ஆண் ஒரு பெண்ணினுடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்கிறான்.

ஆனால்

**அவள் அவனுக்குத் துரோகம் செய்கிறாள்**

இது எப்படி நடைபெறுகிறது? இவ்வித நடத்தைகளுக்குப் பொறுப்பாளிகள் யார்? என்பதைப் பற்றிவிரிவாக ஆராய்ந்திருக்கிறார் இந்தக்கதையில்

ஆசிரியர் : **ரா. தணலன்**

# பாதாள பைரவி

**கதைச் செறிவும், கருத்தோட்டமும் நிறைந்த அழகிய கதைப் புத்தகம்**

**விலை அணா 12.** விற்பனை கழிவு 25%

: தேவைக்கு எழுதுங்கள்:

**இராஜன் பதிப்பகம்,**

**மேட்டுப்பாளையம்,**

முசிரி தாலூகா, திருச்சி ஜில்லா.

# சோகச் சுழல்

[மனமில்லாத மாலாவை வற்புறுத்துகிருன் தந்தை]

தந்தை: மாலா! உன் அறியாமைக்காக இரங்கு கின்றேன். படித்தவள்தான் நீ; ஆனல் பரந்த உலகானுபவம் இல்லாதவள். வழி வழியாக வந்த பழக்கங்களைப் பாடையிலேற்றி புதுமையை புன்சிரிப்போடு வரவேற்கின்ருய். நமது முன்னேர்களெல்லாம் முட்டாள்களா அம்மா,

மாலா: முட்டாள்களோ இல்லையோ, எனக்குத் தெரியாது. இன்றிருப்பவர்கள் அவர்களைவிட கெட்டிக்காரர்கள்.

தந்தை: எப்படியம்மா சொல்கிருய்? என்ன ஆதாரம் அதற்கு?

மாலா: ஆதாரமா! சொல்லுகின்றேன் கேளுங்கள். பழைய காலத்தில் ரூபாய்க்கு 12 படி அரிசி. விளக்கேற்றி வைக்க ஒப்புக்கொண்டால் வீட்டில் இலவசமாகக் குடியிருக்கலாம் எவ்வளவு நாட்கள் வேண்டுமானுலும். உப்பு, புளி, மிளகாய் ஒரு ரூபாயுக்கு வாங்கினுல் போதும். ஆடைகளை வாங்க ஆட்கள் இல்லை. அந்த நாளில் அவ்வளவு ஆடைகள் தேவைப்படவும் இல்லை, வேடிக்கை என்ருலே தெருகூத்தும் திருவிழாவும்தான். சினிமா கொட்டகைகள் இல்லாத காலம். கண்காட்சி என்ருலே கரிவரதனை சேவிப்பது என்பார்கள். அப்போதெல்லாம் காளைகளை

வாங்குவதற்கு நடந்து செல்வார்களேயன்றி, இப்போது வேட்டையாடப் புறப்பட்டாலும் வாக்சால் காரில் பிரயாணம்செய்கிறார்களே. அப்படியல்ல, அந்த வசதியும் வாய்ப்பும் இல்லாத காலம். பருவம் தவறாத மழை, பக்குவமாக ஆளும் அரசன், மக்களை மதிக்கும் மந்திரி, வரிகளோசொற்பம், வாழ்க்கையோ சிக்கனம். அவ்வளவு வசதி இருந்த காலத்தில் தாது பஞ்சம், அட்சயா கருப்பு, கஞ்சிதொட்டி வைத்தார்கள் என்றெல்லாம் பெரியோர்கள் பேசக் கேட்டிருக்கிறேன். நீங்களும் சொல்லியிருக்கின்றீர்கள்.

இப்போது பாருங்கள் எப்படி வாழ்கிறார்கள் எங்கும் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்பது எந்த அளவுக்குத் தெரிகிறது. பஞ்சமா! என்றுகூட நான் சந்தேகப்படக்கூடிய நிலையிலிருக்கிறது? குளிக்கசோப் முகத்துக்கு ஸ்நோ, பவுடர், காலையில் காபி, ஒரு பர்லாங்கு நடக்கவேண்டுமானாலும் டிராம், ரிக்ஷா, ஆட்டோரிக்ஷா, டாக்சி, பஸ் முதலான இந்த வாகனங்களில்தான் போகிறார்கள். சினிமா பார்க்காத நாள் இல்லை. உயர்ந்த உடைகள் ஒன்றல்ல, இரண்டல்ல குறைந்தது ஒருவருக்கு நான்கு உடைகள், நாகரீக வாழ்க்கை. நல்ல விருந்து. பந்தாட்டம், பால்டேன்ஸ் முதலான காட்சிகள். இவ்வளவும் பார்க்கும்போது பஞ்சம் இருப்பதாக எங்கே தெரிகின்றது

**தந்தை:** தெரியவில்லையா? என்னம்மா அது! போனவாரம் ஒரு பத்திரிகையிலே படித்தேன். தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோவிலூர் என்ற ஊரில் பசியால் வாடிய ஒருவன் பிணத்தைப் பிடுங்கித் தின்றான் என்று. சேலத்திலே பலர் மடிந்தார்கள்

என்று. இன்னும் எத்தனையோ குடும்பங்கள் அலை மோதிக்கொண்டிருக்கின்றன என்று பஞ்சமே தெரியாத பக்கிரி ஜமீன்தார் வீட்டுக்குழந்தை மாதிரி பேசறையே அம்மா. பட்டண வாசத்திலே உள்ளவங்க என்னமோ நீ சொல்றமாதிரிதான் இருக்காங்கோ கிராமத்திலே போய்ப் பாரம்மா. எங்கப்பா காலத்திலே லட்சுமி தாண்டவமாடிடுவா.

மாலா: சரிதான். அந்தக் களைப்பிலேதான் லட்சுமி இப்ப தூங்கருப்பலே இருக்கு போப்பா. ஜனத்தொகையும் பெருகி, மழையும் இல்லாமெ, ஆள்பவருக்கும் கவலை யில்லையானல் இதைப்போன்ற நிகழ்ச்சிகள் சகஜந்தானே அப்பா. அதற்காக நாம் என்ன செய்யலாம்.

தந்தை: பல கஷ்டங்களுக்கு பகவானை குறை கூறுகிற மக்கள், பசியெடுத்தால்மட்டும் பாராளுமன்றத்தைக் குறை கூறுகிருர்கள். பசித்தாலும் ஆண்டவனையே நோகவேண்டியதுதானே. அதை விட்டுவிட்டு சர்க்காரை நோவானேன்?

மாலா: நல்ல கேள்வியப்பா. சுயமரியாதைப் பிரசாரம் ஆரம்பித்துவிட்டீர்களே!

தந்தை: உண்மை சொல்லுவதற்குப் பெயர் சுயமரியாதை என்ருல் உள்ளன்போடு வரவேற்கிறேன். எதையோ ஆரம்பித்து, எங்கேயோ வந்துவிட்டோம். நான் உன்னைக் கேழ்க்க வந்தது உன் திருமண விஷயமாக.

மாலா: நீங்களே முடிவுகட்டுவதானல் என்னைக் கேட்டிருக்கமாட்டீர்கள். என்னைக் கேட்டதிலிருந்தே

என் விருப்பத்தைத் தாராளமாக சொல்லலாமென்ற நம்பிக்கைப்பிறக்கிறது.

தந்தை: ஆமாம். ஆனல் ஒன்று. நீண்டநாள் வாழவேண்டிய விஷயம். நீமாத்திரம் தேர்ந்தெடுத்து விடமுடியாது. உன் வாழ்க்கையில் கவலை கொண்டவர்கள் அனைவருமே சேர்ந்து முடிவுகட்ட வேண்டியது என்பதை மறந்துவிடாதே. ரோஜா மலரை சீக்கிரமாக செடியில் கண்டுபிடித்துவிடலாம், மனோரஞ்சித மலரை சீக்கிரமாகக் கண்டுபிடித்துவிட முடியாது இலை நிறமாகவே இருக்கும் அதுவும்! அதையும் மனதில் வைத்துக்கொள்.

மாலா: நான் தான் என் முடிவை முன்னமே தெரிவித்திருக்கின்றேனே அப்பா.

தந்தை: அது சரி என்றால், மீண்டும் இந்த பிரச்னை எழக்காரணமே இல்லையே. நீ விரும்பியவன், உன்னோடு படித்தவன்தான், நல்லவன், அழகனுங் கூட. நான் அறிவையும் அழகையும் ஒப்புக்கொள்ளாத அவ்வளவு மடையனு. நீ அவனைக் காதல் கண் கொண்டு பார்க்கிருய். நான் அவனைக் கருத்து கண் கொண்டு பார்க்கிறேன். நீ, அவனை மட்டிலும் மனதிலே வைத்திருக்கிருய், நான் அவர்கள் முன்னோர்கள் பட்டியலையே மனதில் வைத்திருக்கின்றேன். உருவிலும் தோற்றத்திலும் எட்டிப் பழத்துக்கும் ஆப்பிள் பழத்துக்கும் அதிக வித்தியாசமில்லை. ஆனல் இரண்டும் ஒரே சுவையுடையதா? நீ மனதிலே வரித்திருக்கிற அவன் உடல் கட்டுள்ளவன்தான், தங்க மேனி, பொற்சிலை, தயாள குணம் தப்பொன்றுமில்லை தாராளமாக ஒப்புக்கொள்ளலாம். இருந்தாலும்

அவன் தந்தை க்ஷயரோகி, பாட்டன் குட்டரோகி, பாட்டிக்கு கருமேகம், அவன் தம்பி பாண்டு வியாதிக்காரன் இந்த பயங்கரப் படையெடுப்புகளுக்கிடையே நிற்கிறுன் அவன். என்ருவது ஓர் நாள் இந்த நால் வகைச் சேனை அவன் வாழ்வுக் கோட்டையை முற்றுகை இடத்தான் போகிறது இவன் வெற்றி பெறுவாஞ, அல்லது அந்த பயங்கர நோய்களே இவனை முறியடித்து வெற்றிச் சங்கூதுமா என்று இப்போது யாருக்குத் தெரியும். காலந்தான் பதில் சொல்லவேண்டும். அந்த கோரக் கடலில் பாய்மரமில்லாத படகு போல் நீ சிக்கிச்சீரழியக்கூடாதே என்பதற்காக நான் கண்ணீர் சிந்துகிறேன். நீ நன்ருக வாழ்வதைப் பார்க்கத்தகுதியற்றப்பகைவஞ நான்? உன்னை ஈன்றபோது எவ்வளவு மகிழ்ந்தேனம்மா. உன்னை நான் வளர்த்த மாதிரியே ஊராருக்கெல்லாம் பொருமை ஏற்பட்டதே. உன்னை நான் வளர்த்த மாதிரியைப் பார்த்து வயிறெரிந்த மற்ற பெற்ருேர்களின் வைராக்கியத்தாலும் பிடிவாதத்தாலும் பொருமையாலும், போட்டி மனப்பான்மையாலும் ஏருத குழந்தைகள் எல்லாம் யானை ஏறின, படகுகளிலேறி பவனி வந்தன. அந்த நிலையில் மற்றவர்கள்பொருமைப்படுமளவுக்கு வளர்த்திருக்கிறேனம்மா. ஏன்? இவ்வளவு தூரம் நீட்டிக் கொண்டு போவானேன். உனக்கு இந்த விஞடி வரையிலும் உன் தாயின் கவனமிருந்ததா? இல்லையே! ஏன் வரவில்லை. அவளை மறந்துவிடும் அளவுக்கு நான் உன்னிடம் தாயுள்ளங் கொண்டிருந்தேன். இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. இன்னும் யோசித்துப் பார்.

மாலா: இரண்டு நாள் கழித்து இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிடலாமப்பா.

தந்தை: (தனக்குள்) அதற்குள் அவனை சந்திக்க எண்ணுகிருயா? தாராளமாக செய். (வெளிப்படையாக) அப்படியே ஆகட்டும். சுதந்திர நாட்டில் இதற்குக்கூடவா உரிமையில்லை. ஆனல் ஒன்றைமட்டிலும் கவனத்தில் வை. பொன்னைக் காட்டிலும் பித்தளை அதிகமாக ஜொலிப்பதுண்டு சூரிய ஒளியில். ஆனல், உண்மையைக் கண்டுபிடிக்க ஒரு சட்டி நெருப்பிருந்தால் போதும். உரைகல் இருந்தால் அதைவிட சுலபம். போ. போ. ஆசை மிகுதியால் அறிவை இழந்துவிடாதே. வருகிறேன்.

ஃ ஃ ஃ

## காதலர்கள் சந்திப்பு

மனோகரன்: மாலா நேற்றுமாலையே வருவதாக.

மாலா: சொன்னேன். அப்பா அணைபோட்டு தடுத்தார்.

மனோ: பெரிய வெள்ளத்தை பெரு விரலால் தடுக்கிருர். பழைய அழுக்கு மூட்டை. என்னதான் சொன்னர்.

மாலா: நமது முடிவு அவருக்கு இஷ்டமில்லை.

மனோ: வாழப்போகின்றவர்கள் நாம். கவனம் வைத்துக்கொள்.

மாலா: யார் இல்லையென்றுர்கள். தங்களிடம் சில சந்தேகங்கள் கேழ்க்க வேண்டும்.

மனோ: இதுவரை சந்தேகத்தோடுத்தான் நெருங்கியிருக்கின்றாயா?

மாலா: சம்பாதித்துக்கொண்ட சந்தேகம். சொந்த சரக்கல்ல.

மனோ: அப்பா! தப்பினேன். ஏனென்றால் உனக்கு சந்தேகமிருந்தால் லட்சம் ஜனத்தொகைக் கொண்ட இந்தவூரில் என்னைத் தேர்ந்தெடுத்திருக்க மாட்டாயே என்று நினைத்தேன். சம்பாதித்தசந் தேகம்யாரிடம் இருந்தது என்பதை நான் தெரிந்துக் கொள்ளலாமா?

மாலா: கோபித்துக் கொள்ளக் கூடாது.

மனோ: ஏனிவ்வளவு ஆச்சரியப்படுகிறாய். உள்ள படியே கோபம் வந்தாலும் ஒளித்து வைத்துக் கொள்ளும் பருவமாயிற்றே. கோபம் நம் கூடலைநீக்கி ஊடலை உண்டாக்கிவிடுமே, காதல் நூலை படிக்காதவள் போல் பேசுகிறாயே. நான் கொடுத்த காதல் புத்தகத்தை எல்லாம் என்ன செய்தாய். வென்னீர் காய்ச்ச வைத்துக் கொண்டாயா?

மாலா: படித்தேன்

மனோ: என்ன படித்தாயோ. இலக்கணச்சுவை எதுகை மோனை உண்டா என்று பார்த்திருப்பாயே தவிற அதில் காதல்ரசம் சொட்டுகிறதா என்று பார்த் திருக்கமாட்டாய்.

மாலா: அதையும் பார்த்தேன்.

மனோ: பார்த்தவளா இப்படிபேசுகிறாய். நீஅதை உள்ளபடியேபார்த்திருந்தால், நான் பார்த்திபனாகவும். நீ அல்லியாகவும் மாறி இருக்கவேண்டும்.

மாலா: நீங்கள் வேண்டுமானுல் பார்த்திபனுக இருங்கள். நான் அல்லியாக இருக்க மாட்டேன்.

மனே: ஏன்?

மாலா: நான் என் பாட்டிவூரில், அல்லி அர்ஜுனு என்ற நாடகத்தை பார்த்தேன். அதில் அர்ஜுனன் அல்லிக்கு கண்ணுடி தாலி கட்டுகிறுன்.

மனே: உம்- தாலி. நமது திருமணத்தில் தாலியிருக்காதே. போகட்டும் என்ன சந்தேகம்?

மாலா: (தைரியமாக) உங்கள் பெற்றேர்களுக்கு ஏதோ தொத்து நோய் இருக்கிறதாகக் கேள்வி.

மனே: கண்டிப்பாக இருந்தது. அது எனக்கு ஒட்டிக்கொள்ளும் என்ற சந்தேகந்தான் நீ எனக்கு கட்டும் தாலி. அல்லவா.

மாலா: எனக்கு அப்படி ஒன்றும் சந்தேகமில்லை. ஆனுல் தந்தையார்—

மனே: ஓஹோ. உங்கப்பா மகா தெரிஞ்ச ஹோமியோபதி கைலாச பண்டிதரு. அப்படியே இருந்ததாக வைத்துக் கொள்வோம். அது எனக்கு எப்படி ஒட்டிக் கொள்ளும்? எவ்வளவோ தொத்து நோய்க்காரர்களை டாக்டர் பரிசோதிக்கின்ருர் அதனுல் டாக்டருக்கு ஒட்டிக்கொள்கிறதா?

மாலா: அதுவும் உண்மைதான். சரி. அப்படியானுல் இன்று முடிவாக தந்தையிடம் சொல்லிவிடுகின்றேன்.

ஃ ஃ ஃ

[மாலாவின் தந்தை மருதாசலத்தை அவர் மைத்துனர் மாணிக்கவாசகம் திருமண விஷயமாக விசாரிக்கின்றார்.]

மாணிக்க: மாமா! என்ன செஞ்சி வெச்சிருக்கீங்கோ.

மருதா: என்னுத்தே.

மாலா: நம்பொ பையன் விவகாரத்தை.

மருதா: சொல்லியிருக்கேன். அந்த கழுதை கிட்டே.

மாால: கிட்டேபோகாதிங்க ஒதைக்கப்போவுது

மருதா: அடே, கழுதைகிட்டே இல்லேய்யா என் மகள்கிட்டே.

மாலா: என்ன சொல்லுச்சி?

மருதா: என்ன சொல்லுது. படிச்ச பொண்ணு இல்லேயா. பாதி சொத்து கேழ்க்குது.

மாணி: சொத்தா.

மருதா: அடடே நானு கேழ்க்கிறேன்! அந்தப் புள்ளே இல்லே கேழ்க்குது.

மாணி: சட்டம் வேறே படிச்சி இருக்கா. இனி பாட புத்தகத்தையே மாத்த வேண்டியதுதான். காய் கறி, சமையல், கணவனுக்கு சமைச்சி போடரது. உடுத்தரது. ஒன்பது, பத்து கொழந்தைகளே பெற்ரது. கோயிலுக்கு போரது, கும்மி கோலாட்டம் போட்ரது தவிர வேறே ஒண்ணும் கத்துக்குடுக்கக்கூடாது. சரித்திரம் படிச்சுட்டு சுதந்திரம் கேழ்க்குதுங்கோ. தவறி குடுத்தமா, சர்வாதிகாரம் பண்ணுதுங்கோ, சமையல்

பண்ணி நம்பளுக்கு முன்னேயே சாப்பிட்டுடுதுங்கோ. கடைசியிலே. அடுப்பாண்டே உங்களுக்காக எவ்வளவு தியாகம் பண்ணேண்ணு வேறே வீரமானியம் கேழ்க்குதுங்கோ. இது பையன் காதுலே விழுந்தா அவன் வேறே என்ன கஷ்டப்படப்போரானோ, என்னமோ சொல்லிப்பார்க்கிறேன்.

மருதா: சொல்றதென்ன—சொன்னதை செய்யச் சொல்லுங்கோ.

மாணி: கேழ்க்க வா போருன். திருப்பதிக்கு போறவன் மாதிரீ தெருவிலே விழுந்து பெறளப் போருன், இவோ இல்லேண்ணு, அவன் இல்லே. அவங்கோ ரெண்டுபேரும் இல்லேண்ணு நான் இல்லே நீங்கோ.........

மருதா: நான் சாகமாட்டேன்.

மாணி: அட பாவி.

மருதா: ஒருத்தரு செத்துரட்ரதிஞலே நாமும் செத்துட்ரதா. மூடப்பழக்கம். அவங்களேயும் சாக விடக்கூடாது. நாமும் சாகக்கூடாது. அதுதான் சாமர்த்தியம்.

மாணி: ஓ அதுக்கு சொல்றீங்களா. பின்னே எப்படித்தான் முடிச்சிங்கோ.

மருதா: அது உங்க இஷ்டந்தான். நான் இருக்கிற விஷயத்தை சொல்லிவிட்டேன்.

மாணி: சரி பார்க்கலாம்.

[மாணிக்கவாசகமும் அவன் மகன் மணிவண்ணனும் பேசுகின்றனர்.]

மாணி: தம்பி! கேட்டையா கதையே.

மணி: என்னப்பா.

மாணி: பாதி சொத்து எழுதி வைக்கோணுமாம்

மணி: எழுதி வெச்சூட்டா போச்சு.

மாணி: என்னடா, இவ்வளவு சுலபமா சொல் லீட்டே லஞ்சம் வாங்கின பணம் மாதிரி. அவங்ககூட அப்படி சொல்ல மாட்டாங்க ளேடா.

மணி;ஏம்பா

மாணி:பின்னலே ஏதாவது கேசு வந்தா செலவுக் குவேணுமேன்னு.

மணி: அப்பா நான் சொல்றது எதுக்குத் தெரியு மாப்பா கலியாணம் பண்ணிகிட்ட பிறகு அவோ வேற நான் வேறையா ஓருயிர் ஈருடல்.

மாணி: அடிசக்கே. அந்த சாட்சாத் மன்மதனு டைய மறுஉருவந்தான்டா. ஓருயிர் ஈருடல் என்னதத் துவார்த்தம்.

மணி: அப்பா! நீங்கொ வேதகாலத்திலே இருந் திருக்க வேண்டிய வங்கொ, எப்படியோ இந்த விஞ் ஞான காலத்திலே பிறந்தூட்டிங்கோ.

மாணி: வேதகாலத்துக்கும், விஞ்ஞானகாலத் துக்கும் ரொம்பொ தூரம் இல்லே குறுக்கீகே ஒரு மந் திரந்தாண்டா எட்டி புடிச்சிகக்கலாம்

மணி: என்னமோ பயப்பட்றீங்களே அவளும் நானும் சகஜமா இருக்கிறப்போ ஒருகையெழுத்து

வாங்கிட்டா சரியா போச்சி. தொழுவத்திலே கட்டின மாடும், தாலிகட்டின பொம்பளேயும் எங்கே போகும்?

மாணி: என்னு தைரியண்டா பெரிய அனுபவஸ் தன் மாதிரி பேசரே.

மணி: அப்பா நம்பொ அவளுக்கு சொத்தை எழுதிவச்சாலும் வெக்கா விட்டாலும் பாதிசொத்து அவளுக்குப் போய் சேரும்.

மாணி: சேரும். சேரும். நம்பொ குடுக்காமெ எப்படிடாபோய்சேர்ந்திடும்?

மணி: சட்டம் கொண்டு போய் சேத்தூடும்.

மாணி: சட்டத்துக்கு இப்பொ கையும் காலும் மொளச் சூட்டுதூண்ணு சொல்லு.

மணி: கர்நாடகம். இப்பொ சட்டம் அப்படியிருக்கு.

மாணி: யாரைக் கேட்டுடா அந்த சட்டம் பண்ணுங்கொ. பணம் வெச்சிருக்கவங்கொ நம்பொ, சட்டம் செய்யிற வங்கொ அவங்கொ.

மணி: நெல்லா சொன்னிங்கொ. சர்க்காரே நம்பளத்தானேப்பா.

மாணி: என்ன ஏட்டிலேயா. டேய்தம்பி! அதெல்லாம் எனக்கு ஒண்ணுந் தெரியாது. உன் சொல் போல எழுதிவெக்கிறேன். மறுபடியும் அவொகிட்டே இருந்து அதே வாங்கி விடமுடியுமா உன்னலே அதே சொல்லு.

மணி: அவொ என்ன புலியாப்பா. பல்லெ புடுங்றது கஷ்டமென்னு நெனேச்சிகொ. கலியாணம்பண்ண ஒரே வருஷத்திலே திருப்பி வாங்கிட்றேன் பாருங்கொ

மாணி: தெரியாமையா சொல்லியிருக்காரு

மணி: யாரு?

மாணி: கம்பரு

மணி: என்னு ணு

மாணி: "மகன் தந்தைக்காற்றும்

மணி: அப்பா...அப்பா போதும் நிறுத்துங்கோ

மாணி: ஏண்டா?

மணி: கம்பரா சொன்னாரு?

மாணி: பின்னெ யார்ரா?

மணி: வள்ளுவரு சொன்னாரப்பா

மாணி: ஓகோ வள்ளுவர் சொன்னாரா ஆமாம் அருட்பாவிலே அப்படித்தான் இருக்கு

மணி: நல்ல வேதனையாபோச்சு. அருட்பாவை வள்ளுவரா எழுதினாரு?

மாணி: இல்லெ இல்லெ; மறந்துவிட்டேன். சேக்கிழையாரு எழுதனாருணு சொல்ல வாயெடுத்தேன் அதுக்குள்ளே வள்ளுவருணு வாய்த்தவறி சொல்லீட்டேன்.

மணி: அப்பா போதும். நமக்கிருக்கிற பொது அறிவு மற்றவங்களுக்கு இனமா கொடுத்தாகூட ொங்கவே மாட்டாங்கொ.

மாணி: ஏண்டா.

மணி: சரி. சரி. அடுத்த வேலெயெ கவனிங்கொ,

ஃ ஃ ஃ

[பணத்தால் அடிப்பட்ட மாலா, மணியை மணந்து விடுகிருள். மனோகரன் இவளிடம் வைத்திருந்த காதலை மீட்க எண்ணுகிருன். ஆனல் வானத்தில் உள்ள சந்திரனை வரவழைக்கும் கதைபோல்முடிகிறது.]

[மனோரம்மியமான வாழ்க்கை யென மணி நினைத்து மகிழ்ச்சிக் கடலில் நீந்துகிருன், அதே கடலில் சூருவளியால் அலை மோதும் மரக்கலம்போல் மாலா தத்தளிக்கிருள்.]

இப்படி வட துருவம் தென் துருவம்போல எட்ட முடியாத தூரத்தில் அவர்கள் வாழ்வு நடத்துகின்ருர்கள்.

ஏதோ மனைவி. எப்படியும் கணவன் என்ற அளவுக்கு, சமூக சம்பிரதாயங்களுக்கு சாய்ந்துகொடுப்பவர்கள் போன்ற பாவனை ஒன்றுதான் தெரிகிறது. உண்மைக் காதலோ உயர்வான எண்ணங்களோ பூத்துக் குலுங்கவில்லை. மாலாவின் கசப்பான பார்வை மணியின் அதிகாரத்தொனி-மாமனுரின் அசட்டுசிரிப்பு ஊராரின் உரையாடல் ஆகியவைகள் அவ்வளவும் இவளை எங்கேயோ ஓர் அனுவசியக் கடலுக்குக் கொண்டு போகிறது. எது உண்மையான வாழ்க்கை ஏன் திருமணம் என்ற முறை, யாருக்காக வாழ்வு என்ற வார்த்தைகளின் உண்மையான தத்துவங்களே அவள் உள்ளக் கிளர்ச்சியால் அடிப்பட்டுப் போய்விடுகின்றன. ஒரு ஆணை நேசித்தாள். மற்ருேர் ஆணையும் நேசிக்கும் மந்தி குணம் படைத்தாள், மன வேதனையை அதிகப்படுத்திக் கொண்டாள். அவள்

மனமே அவளைக் கொல்லுகிறது. மனோகரன், மணி ஆகிய இரண்டு உருவங்களையும் தன் மனக் கண்ணால் பார்ப்பாள். மனோகரன் எங்கே, மணி எங்கே-பணம் பட்டம், அந்தஸ்து, அழகு அவ்வளவும் ஒருங்கே திரண்டு _ மனோகரனுக்கு அழகாயமைந்திருக்கிறது. அழகு, பணம், பட்டம், அந்தஸ்து ஆகியவைகளாகப் பிரிந்துவிட்டிருக்கிறது மணியிடம் அவ்வளவு வித்தியாசம். மணிககு அழகில்லை. ஆனாலும் கணவன். மனோகரன் அழகன், ஆனால் நெருங்க முடியாது. இதற்கிடையிலே பெரும் பள்ளம். தாண்டமுடியாத வேதனையால் தவித்தாள். இனி எதையும் செய்ய அவளால் முடியாது. பணத்திற்காகத் தன்னை விலைகூறி விட்டான் தந்தை. பார்ப்பன மந்திரத்தோடு மண வினை முடிந்தது. அந்த வினையை எந்த வினையாலும் எதிர்க்க முடியாதென்றல்லவா இதுநாள் வரையிலும் சமுதாயம் பேசிக்கொண்டு வந்திருக்கிறது. மராட்டிய சாம்ராஜ்ஜியத்தின் நிகரற்ற வாள் வீரன் சிவாஜியினாலேயே அதை எதிர்க்க முடியவில்லையே, சிறு பெண்ணா எதிர்க்கப்போகிறாள். குடும்பத்தில் கொந்தளிப்பில்லாமல் இருக்கவேண்டும் என்பதற்காக தன் ஆத்திரத்தையும் அவமானத்தையும் அடக்கிக்கொண்டிருந்தாள், அவளுடைய ஆரம்ப ஏற்பாடே சரி என்று எண்ணாத தந்தை அவளை மணி விலாசத்தின் பொம்மையாக்கிவிட்டான்.

மணி இவளிடம் சில நேரங்களில் ஆசையாகப் பேசுவான், காதலர்கள் இருவருக்குமுள்ள சில சேஷ்டைகள் செய்வான், இரவு வராதா என்று ஏங்குவாள் மாலா-பொழுது சாய்ந்துவிட்டதே என் புலம்பு

யான் மணி. இரவைக் கண்டால் அவனுக்கு அவ்வளவு பயம். அதிலும் சந்திரனைக்கண்டால் இன்னும் சொல்லவே வேண்டியதில்லை. தென்றல் வீசினால் தேனீ கொட்டியதைப் போல நினைப்பான். பாவம், அவனுக்கும் பாவையர்நேசத்துக்கும் அவ்வளவுபகை. பருவம், கோடிட்ட ஆசை. தனக்குப்பின் குடும்ப நிர்வாகம், சந்ததிகள் ஆகியவைகளை நினைத்துத்தானே எந்த தந்தையும் தன் மகனுக்குத் திருமணம் செய்கிறான். காதல் உணர்ச்சியுண்டா இல்லையா என்றறிய அவனென்ன டாக்டரா? எல்லோரும் செய்வதைப் அவனும் செய்து முடித்தான். ஏன்? மற்றவர்களைக் காட்டிலும் மண விஷயத்தில் இரண்டோர் படிகள் முன்னேறியே சென்றிருக்கிறான். மற்றவர்கள் தம் மக்களின் அறிவு. ஆராய்ச்சி, கல்வி கேள்விகள் கட்டழகு ஆகிய இவ்வளவும்வைத்து. இதற்கென்ன பரிசு என்று கேட்டு, பரிசாகப் பெண்ணை வாங்கி பையனுக்குத் தருவார்கள். இது பல தலைமுறையாகப் பாரில் நடந்துவரும் பழக்கமும்கூட. ஆனால் இவன் பாதி சொத்தையே கொடுத்து மாலாவை—சந்தையில் மாடு வாங்குவதைப்போல விலைக்கே வாங்கியிருக்கிறானே. மாலாவை எப்படி நடத்தினாலும், அவள் தந்தை மருதாசலம் ஒன்றும் கேழ்க்கமுடியாதே. விலைக்கல்லவா விற்றுவிட்டான் விவேகமில்லாதவன்.

ஆணுக்கு ஒரு பெண், பெண்ணுக்கு ஒரு ஆண் என்று வரிக்க பாடம் படித்துவிட்டானே தவிர, எந்த ஆணுக்கு எந்தபெண், எந்த பெண்ணுக்கு எந்த ஆண் என்று தாரதம்மியம் பார்க்கவில்லையே தரித்திர புத்திக்காரன். எப்படியோ முடித்துவிட்டான் திரு

மணத்தை; எலியும் பூனையும் ஆனார்கள் மாலாவும் மணியும்.

பல இரவுகள் பக்கத்துத் தெருவில் சீட்டாடி விட்டு விடிந்தபிறகு வீட்டுக்கு வரும் மணியை மாலா வால் தன் வசப்படுத்தமுடியவில்லை. ஒரே நேரத்தில் இரண்டு சந்தேகங்கள் உதித்துவிட்டன மாலா உள் ளத்தில். ஒன்று தான் விருப்பமில்லையா என்பது; மற்றொன்று சீட்டாட்டத்தில் அதிகஆசையா என்பது ஒன்றுக்கு மாத்திரம் விடை எளிதில் கிடைத்து விட் டது. அதாவது சீட்டாட்டத்தில் அதிகப்பிரேமைஎன் பது. மற்றொன்றுக்கு விடைகிடைக்கவில்லை. அதுதான் தன்மேல் பிரேமை உண்டா இல்லையா என்பது. இதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இனி விட்டு வைப்பதில் பயனில்லை. இரண்டில் ஒன்று பார்த்து விடலாம் என துணிந்துவிட்டாள்.

மாலா: இன்று தாங்கள் பக்கத்துத் தெருவுக்குப் போகக்கூடாது.

மணி: ஏன் ?

மாலா: காரணம் சொல்லமுடியாது. வீட்டிலே படுத்துக்கொள்ளவேண்டும்.

மணி: வீட்டிலே படுத்தால் தூக்கம் வராது.

மாலா: தூங்காமல் இருந்தால்தான் நல்லது.

மணி: தூங்காமல் இருந்தால் தூக்கம் கெட்டு விடும்

மாலா: தூங்கிக்கொண்டேதான் சீட்டு ஆடுகின் றீர்களோ பக்கத்துத் தெருவில் ?

மணி: அதை யார் நீ கேழ்க்க ?

மாலா: நான் கேழ்க்காமல் வேறெ யார் கேழ்ப்பார்கள்?

மணி: உனக்கு கேழ்க்கும் உரிமையில்லையே. அதோ பார் மாடு, அது ராணிப்பேட்டை சந்தையில் பிடித்தது விலைக்கு. கீழே பார் இந்தநாயை இது ராஜ பாளையத்தில் வாங்கியது பணம் கொடுத்து. அதை போல உன்னையும் வேதாரண்ணியச்சந்தையிலேபிடித்தோம். பாதிசொத்தை கொடுத்து. அத்தமாடும இந்த நாயும் என்னோடு பேசுகின்றனவா? இல்லை. அதைப் போலத்தான் நீயும் இருக்கவேண்டும். பேசக்கூடாது.

மாலா: மனைவி என்ற உரிமை.

மணி: மனைவிக்குஏது உரிமை. பணத்திற்குவிற்பதா உரிமை. சிலபேர் தியாகம்என்றாலே என்ன என தெரியாமல் திண்டாடுகிறார்களே தியாகம் என்றால், உயிரை, உடலை, ரத்தத்தை, சோத்தை கொடுப்பதற்குப் பெயர் தியாகம்! சொத்தை வாங்கிக்கொள்வதற்குப் பெயர் தியாகமா? அதைப்போல் இருக்கிறது உன் வாதம். நான் எங்கே போகிறேன், எப்போது வருவேன் என்றெல்லாம் நீ கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது. உனக்கு வேண்டியது வேளா வேளைக்கு உணவு, உடுக்க உடை அவ்வளவுதான். அவைகளைத் தாராளமாகத் தருகிறேன், அதோடு நின்றுவிடு. அதற்குமேல் ஒன்றும் கேள்வியை எழுப்பி கலவரம் செய்யாதே என்று போகப் புறப்பட்டான். வெளியே இடி மின்னல். திண்ணையிலே நெடுநேரம் உட்கார்ந்திருந்தான் மழை நின்றுவிடும் என்ற நம்பிக்கையால். மழை நின்றுவிடக்கூடாதா? மணியின் ஆசை. மழை நில்லாமல் மணி வீட்டிலேயே நின்றுவிடக் கூடாதா?

இது மாலாவின் ஆசை. இரண்டுபேரில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்று தெரியவில்லை. திண்ணையில் மணி, பக்கத்தில் மாலா. உள்ளே வாருங்கள்! என்ற சைகை. வரமுடியாது என்ற தலையாட்டம். இப்படி சில நேரம் கழிந்தது. மழை விட்டபாடில்லை. வீட்டில் தங்கி விடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை. உள்ளே சென்று படுத்தான் மணி. பின் தொடர்ந்த மாலா கதவைத் தாளிட்டாள். ஆம், இன்று ஒரு புனித நாள். இத்தனை நாட்கள் கைக்குக்கிடைக்காத கிளி இன்றுதான் அகப்பட்டது. விடிகின்றவரையிலும் அந்தக்கிளி இந்த கூண்டை (அறை) விட்டு வெளியில் போகமுடியாது என்று பெருமிதம் கொண்டாள். பூரித்தது உடல், புளகாங்கிதமுற்றது மனம். யாரோ ஐந்தாறு பேர்கள் சுற்றிலும் நின்றுக்கொண்டு மாலா அடைந்த மகத்தான வெற்றி, மாலா வாழ்க! மணி வாழ்க! மணமக்கள் வாழ்க! என்ற பேரொலி எழுப்புவதாகத் தோன்றுகிறது. இன்று எங்களோடு பேசமாட்டாய்! என்று தன்னோடு படித்த தயாபரி கேழ்ப்பதைப் போன்றதோர் எண்ணம். இனிமேல் அவ்வளவுதான. சிங்கத்தைத் தந்திரமாக கூண்டில் அடைத்து விட்ட சிங்காரி இனி அதன் கொழுப்பு அடங்கும் வரையில் வெளியேற்ற மாட்டாள். இப்படி பலர் கேழ்ப்பதைப் போன்ற நினைவு பாவம், நெடுநாள் பட்டினி ஒரேயடியாக அள்ளிப் புசித்துவிடாதே. செரிக்காது, பல நாட்கள் கையாள வேண்டிய பொருள் பக்குவமாகப் பாத்துக்கொள் இப்படி ஒரு ஓசை கேழ்ப்பதைப்போன்ற உணர்ச்சி.

பக்கத்தில் பால்கொண்டு வைத்தாள். பழத்தட்டையும் அதற்குத்துணை சேர்த்தாள். நெருங்கினாள்,

தான் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் ஏமாற்றமான காட்சியையே கண்டாள். மணி குறட்டை விடுகின்ருன். படுத்து 5 நிமிஷங்கள்கூட ஆகவில்லை அதற்குள் தூங்கி விட்டான், இவளால் நம்பமுடியவில்லை, வேடிக்கை செய்கிருர் என்று நினைத்திருந்தாள். பல புதியஜோடிகளின் ஆரம்பவிழா இப்படித்தான் இருக்குமோ என்று யூகித்தாள். நம்மை எழுப்ப எப்படியும் அவள் கரத்தால் தீண்டித்தானேயாகவேண்டும். தீண்டட்டும் என்றுகூட வேடம் போடுகின்ருர் என தனக்குள் சிரித்துக்கொண்டே கையால் தடவிஞள். மறுபக்கம் திரும்பிப்படுத்தான். மறுபடியும் உலுக்கிஞள். இவள் கையை அப்புறம் பிடித்துத் தள்ளிவிட்டு போர்வையால் முகம் உள்பட முழு உருவத்தை மறைத்துக்கொண்டான். உடலையே பிடித்தாட்டிஞள் அவளா ஆட்டுகிருள், தொல்லைக் கொடுக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணமா? இல்லை. இங்கேதான் அவள் பரிதாப நிலையைச் சொல்லமுடியவில்லை. அதற்குள் அவ்வழியாக வந்த மாமஞர் மாணிக்கவாசகர், அந்த அறையின் உள்ளே வளையல் சப்தம் கேட்பதையும், மாலா முணுமுணுத்துக்கொண்டிருப்பதையும் கேட்டார். அவர் ஓர் நாகரீகம் தெரியாத மனிதர். அந்த நேரத்தில் "உள்ளே என்ன சப்தம்" என்று கேழ்க்கலாமா? கேட்டுவிட்டார். 'ஒன்றுமில்லை' என்று உலகமெல்லாம் சொல்லும் ஏகமனதானபதிலைத்தவிர அவள் மாத்திரம் வேறு என்னசொல்லமுடியும்? பிறர் தெரிந்துக்கொள்ள முடியாத ஒன்றை தெரிந்துக்— கொள்ள ஆசைப்படும் ஒருவனுக்கு, வெட்கததால் சொல்லமுடியாத நிலையில் மரியாதைக்காக ஏதாவது பதில் சொல்லித்தீரவேண்டுமே என்று நினைக்கின்ற

வர்களுக்கு 'ஒன்றுமில்லை' என்ற தற்காப்பு வார்த்தை தவிர வேறு ஒன்றுமில்லையல்லவா? அதையேதான் அவளும் சொன்னாள் அதோடு விட்டாரா கிழவர் உள்ளே இருக்கானா? என்ற கேழ்வியையும அடுத்து போட்டார். ஆமாம் என்றாள். "ஏன் மழையில் சீட்டுக்கட்டுகள் நனைந்துவிட்டதோ?" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார்.

அவ்வளவுதான். அதற்குள் அறையில் ஏதோ சாமான்கள் உருளும சத்தம் கேட்டது. கதவைத் திறந்துக்கொண்டு வெளியேஓடிவந்து, தெருக்கதவை திறந்துக்கொண்டு வெளியே ஓடிப்போய்விட்டான். எதிரிலே தந்தை வருவதையும் கவனிக்காமல் முட்டி மாதிக்கொண்டு ஓடிவிட்டான். ஓடியவன் தன் மகனாக இருக்கமுடியாது என்று தீர்மானித்து விட்டார் மாணிக்கவாசகம். ஏனெனில், கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் மாலாவோடு பேசிவிட்டு வந்தான். தன்னிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே இப்படி எவனோ ஒரு கள்ளநாயகன் வெளியே ஓடுகிறான் என தவறாக நினைத்துக்கொண்டு, ஆத்திரத்தோடு உள்ளே வந்து, "மாலா! ஓடியவன் யார்?" என்று கேழ்க்க, "பெண்ணுக்குப் பயந்து பேடிபோல் ஓடும் உங்கள் கண்ணான மகன்" என பதிலுரைத்தாள். சரி, இரவில் இதைப்பற்றிப் பேசி, அக்கம்பக்கத்தார் அறியுமளவுக்குக் கலவரம் செய்யக்கூடாது என்று நினைத்து, காலையில் பார்த்துக்கொள்வோம் என்றுபடுக்கைக்குப் போய்விட்டான். மாலாவின்மனம் அந்த இருளைவிட கேவலமாக இருந்தது. என்ன செய்வாள். இனி இவனோடு வாழ்வதில் பயனில்லை, வேறு வழியைத்தேடித் தீரவேண்டும், கணவன் தன்னிடம் இவ்வளவு பிண

க்குக்கொண்டிருப்பதற்குக் காரணமறிய வேண்டும் என்ற அவா அவளை மேலும் மேலும் பிரண்டியது. அதனால் தனக்கு என்னபயன் என்று அதை ஆராய்ந்து உண்மையைக் கண்டு பிடிக்கும் வரையில் இளமைக் காத்துக்கொண்டிருக்குமா? இது வீண் வேலை. நேரம் சிறகில்லாத பறவை, பருவத்தே பயிர் செய், கிட்டா தாயின் வெட்டன மற என்றெல்லாம் வேதாந்த விசா ரணையிலாழ்ந்துவிட்டாள். 'சோகம்' என்ற சொல்லைப் பல கோணங்களிலே இருந்து ஆராய்ச்சி செய்துபார்த் தாள். எந்த முடிவுக்கும் அவளால் வரமுடியவில்லை. ஒன்று, தன்மேல் அன்பில்லாமல் இருக்கவேண்டும். அல்லது அவனுக்கு ஆண்மையில்லாமலிருக்க வேண் டும். இந்த இரண்டு விசாரங்களே வெளிப்படை யானவை. மற்றொன்று இதற்கிடையிலே மறைந்து இருக்கிறது. அதுதான், தனக்கும் தன் பழைய காத லன் மனோகரனுக்கும் கடிதத்தொடர்பு இருப்பதை அறிந்துக்கொண்டானோ என்ற சந்தேகம். இருக்காது என்ற ஆறுதல். விடியட்டும் பொழுதென்று படுத் தாள், விடிந்துவிட்டது என்று பக்கத்து வீட்டுச் சேவல் சொல்லிற்று.

வழக்கம்போல் பால்காரன் வந்தான். பால் அள வுச்சிட்டோடு மற்றொரு சீட்டையும் கொடுத்தாள். எதற்கு இந்த இரண்டு என்றான். ஒன்று இந்த பாலு க்கு மற்றொன்று ஆண்பாலுக்கென்றாள். சிரித்துக் கொண்டே சைகிள் ஏறிவிட்டான். ஆம். இன்று முடிவு. மாலை பால்காரன் வரும்போது கட்டாயம் பதில் வந்துவிடும் என்று தனக்குள் பேசிக்கொண்டே வீட்டிற்குள் வந்துவிட்டாள்.

அன்று பகற்பொழுது கழிந்தது. மாலைச்சூரியன் மலைவாயில் விழும் நேரம், வெளியே சைகிள் மணி யடிக்கும் ஓசை. பால் சொம்பின் பளபளப்பை மிஞ்சி விடும் பளபளப்பான முகத்தோடு வந்தாள். பால் கொடுத்தான். பக்கத்துணையாக காதலன் கருத்துக்களை ஏந்தி வந்த காகிதத்தையும் கொடுத்தான்.

பாலை அடுப்பில் ஏற்றி, படிக்க ஆரம்பித்தாள். பால் பொங்குகிறதா, தன்மனம் பொங்குகிறதா என்ற வித்தியாசம் தெரியாமல் திகைத்தாள். பலமுறை படித்தாள். பால் பொங்கி வழிகிறது.

> "நாளை இரவு 1-15க்கு கடலூர் பழைய பட்டிணம் வரும் இண்டோ சிலோன் எக்ஸ்பிர சில் நாமிருவரும் புறப்பட்டு விடலாம். கவலை வேண்டாம்.
>
> —மனோகரன்.

இவைதான் மடலிலுள்ள மணிவாசகங்கள். கடி தத்தை ஜன்னலில் வைத்துவிட்டு, பொங்கிய பாலை இறக்கினாள், காற்றில் கடிதம் அடித்துக் கொண்டு போய்விட்டது. ஆனால் அதை எடுத்துவைக்கவேண் டிய இடத்தில் வைத்துவிட்டாள்,

இதற்குள் மணி உள்ளே நுழைந்து வழக்கமாக உணவுண்டு நால்வரைத்தேட புறப்பட்டு விட்டான். அன்றிரவு கழிந்தது.

மறுநாள் காலையும் வந்தான் மணி. ஒரு டப்பி யில் போட்டு குங்கும டப்பியின் பக்கத்திலே வைத்தி ருந்தாள். பக்கத்துவீட்டுக் குழந்தை அந்த டப்பியை எடுத்து விளையாடிக்கொண்டே தெருப்பக்கம் போய்

விட்டது. படிகள் இறங்க முடியாமல் தடுமாறிக் கையில் இருந்த டப்பியை கீழே விட்டுவிட்டது. விழுந்த டப்பி அதிர்ச்சியால் மூடிதிறந்துக் கொண்டது. குழந்தை அழுகிறது. இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே வருகின்றான் மணி. அழும் குழந்தையை யை எடுத்து ஆறுதல் சொல்லி, டப்பியை எடுத்துக் கொடுக்க கீழே குனிந்தான். ஒரு கடிதச்சுருள், கழண்டுவிட்ட மூடி. இவைகளை எடுத்துக்கொடுக்கும் போது கடிதத்தைப் படித்தான். கனல் கக்கவுமில்லை புனல் கக்கவுமில்லை. விட்டதுபீடை என்றெண்ணவுமில்லை, வேறோர் உலகத்தில் சஞ்சரித்த இவனுக்கு இது ஓர் அதிர்ச்சியை உண்டாக்கவுமில்லை. அவன் எண்ணம் காதல் அல்லது சாதல் என்பதையும் தொட்டுக்கொண்டிருக்கவுமில்லை. ஆனால் பேரேட்டின் லாப நஷ்ட கணக்குகளைமட்டும் தொட்டுக்கொண்டிருந்தது இவள் ஒழிந்தால் இவளுக்காக எழுதிவைத்திருக்கும் சொத்துக்கள் மிகுதியாகும் என்றெண்ணிக்கொண்டான். ஆனால் அதோடு நிற்கவில்லை அவன் ஈனபுத்தி கருணாகரனுக்கும் தன மனைவிக்கும் காதல் உண்டென்பதும், அவர்கள் ராமேஸ்வரம் புறப்படத் திட்டமிட்டிருந்ததையும் தான் உணர்ந்ததாக அவர்கள் உணர வேண்டும் என்பதே அவனுடைய ஆசை. ஆனால் அதற்குள், அதாவது அவள் புறப்படுவதற்குள் அந்த சாசனப்பத்திரத்தைக் கைப்பற்ற முடியுமா என்று முயற்சித்தான். அந்த சொத்துக்களை மீண்டும் இவனுக்கே எழுதி பதிவு செய்திருந்த பத்திரத்தையும் கண்டெடுத்தான். பிறர் சொத்தைப் பேணாத மகா உத்தமி என்று மனம் விம்மினனே தவிர மானம் பரி போகுமே என்ற மனவேதனையடையாத மட்டி.

இரவு 1-15மணிக்கு வண்டி வரவேண்டிய நேரம் ஆனல் வழக்கம்போல் 250 நிமிஷங்கள் தாமதித்து வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அப்பா 250 நிமிஷங்கள்! நான்குமணி நேரம் 10 நிமிஷங்கள்! அப் படியானல் 5-25க்குதான் வரும், விடிகிற நேரம், வெளிச்சம் அவ்வளவாக இருக்காது. மையிருட்டு, ஆனல் அதற்குள் யாராவது தன்னைக் கண்டுகொண் டால் ஆபத்தாக முடியுமே என்றெல்லாம் வேதனைப் பட்டார்கள். ஆனல் 250 நிமிஷ தாமதம் இராமேஸ் வரம் போகும் வண்டிக்கல்ல, சென்னைக்கு போகும் வண்டிக்கு, பயத்தில் இப்படி படித்துவிட்டார்கள். வண்டி வருவதற்குண்டான எல்லா அறிகுறிகளும காணப்படுகின்றன. கள்ளக்காதலர்கள் ஒதுங்கி ஒதுங்கி நின்றுர்கள். இரண்டாம் வகுப்பு டிக்கட்டு கள் முந்தியநாளே பதிவு செய்யப்பட்டிருக்கிறது, அதில்சென்றுல்தான் பலர் அடிக்கடி ஏறுவதும் இறங் குவதுமான தொல்லைகள் இல்லாமல் இருக்கும், பொழுது விடிகிறவரையில் நிம்மதியாக போகலாம். வண்டியும் வந்து நின்றுவிட்டது. இருவரும் உள்ளே நுழைந்துவிட்டார்கள்.

வழக்கமாக இன்ஜினுக்கு தண்ணீர் பிடிக்கப்பட் டது. புறப்படுவதற்கான முதல் மணியும் அடித்தாய் விட்டது, இவர்கள் உட்கார்ந்துக்கொண்டிருந்த வண்டியின் உள்ளே யாரோ ஒருவன் கையில்இரண்டு சிறிய பார்சல்களோடு நுழைந்து இருவருககும் ஒவ் வொன்றைக்கொடுத்தான்.

"இதை யார் கொடுத்தது" என்று வினவி, வந்த வன் பதில் சொல்வதற்குள் வ்ண்டி புறப்பட்டுவிட்

டது. வந்தவன் கீழே குதித்துவிட்டான். வண்டியும் தன் வழக்கமான நடைபோட்டுக் கிளம்பிவிட்டது. இருவரும் சற்று நேரம் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தனர். பார்சல் மூட்டையைப் பார்க்கக் கையில் எடுத்தாள். 'அதற்கென்ன அவசரம் என்பதைப் போல், அவள் கையைப் பிடித்திழுத்து தன் அருகில் உட்காரவைத்துக்கொண்டான்.' பிறகு என்ன நடந்ததோ, இதைக் கவனிப்பதா புகைவண்டிக்கு வேலை இரண்டு அங்குல தண்டவாளத்தில் நாற்பது மைல் வேகத்தில் குறித்தநேரத்திலும் குறித்த இடத்துக்கும் போய்ச் சேரவேண்டுமே. அந்தக் கவலையில், கேப்பர் குவாரி, ஆலப்பாக்கம், புதுச்சத்திரம், பறங்கிப் பேட்டை, கிள்ளை என்ற ஸ்டேஷன்கள் ஒன்றிலும் நிற்காமல் சிதம்பரத்தில் வந்து நின்று புறப்பட்டு விட்டது, காதலர்களுக்கு மூட்டையைப் பிரித்துப் பார்க்கும் ஒரு வேலைதான் இருந்தது.

பிரித்ததில். மாலாவிட முள்ளதில் ஒரு புது சேலை. நூறு ரூபாய் நோட்டு ஒன்று கடிதம் ஒன்று. கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள். வண்டியும் புறப் பட்டுவிட்டது. தன் கணவன் கையெழுத்து.

என்னை வஞ்சித்து ஓடுகிறாய். அவனையும் வஞ்சிக் காதே ஆனால் உன் உயிர்......என்று படிப்பதற்குள் கண்ணீர் எழுத்துக்களை நடனமாட வைத்துவிட்டது. வண்டி வல்லம்படுகை என்ற ஸ்டேஷனைத்தாண்டி விட்டது. கணவன் கண்டுகொண்டான். ஒருவேளை இந்த வண்டியிலேயே தன்னைப் பழிவாங்க வருகின் றானோ என்னவோ-இனி உயிர் வாழ எண்ணினால், கொலைசெய்துவிடுவான்,' குடிகாரன், சூதாடி, இனி

இருக்கக்கூடாது. இந்த அபாயம் நிழல்போல் தொட ரும். மறிப்பதே மேல். அதற்குள் வண்டி கொளளி டம் ஆற்றுப்பாலத்தின்மேல், கடகட வென்ற பேரிரைச்சலோடு போய்க்கொண்டிருக்கின்றது. எட் டிப்பார்த்தாள், கம்பிகளைப் பிடித்திருந்த கைகளை விட்டுவிட்டாள். வெள்ளத்தோடு வெள்ளமாகபோய் விட்டாள். மனோகரன பார்த்தான் வண்டியை நிறுத்தி ஞல் காரணம் சொல்லவேண்டும். காரணம் சொன் ஞல் கைதியான பின விசாரணையில் தன் கள்ளநட்பை சொல்லவேண்டும், ஏன் இவ்வளவு தொல்லை-இடை யிலே வந்தது இடையிலேயே ஒழியட்டும். என்று தெருக்கோடியார் (பிள்ளையார்) ஆய்விட்டான் நம்பி யவளை நட்டாற்றில்விட்ட நயவஞ்சகன். சுழல்வெள் ளத்தோடு சுற்றிச் சுற்றிப் போய்க்கொண்டிருக்கிருள் மாலா—

தன் செயலைத்தானே நினைத்து நினைத்து வருந்தி ஞன். எனினும் வெளியே சொல்ல முடியவில்லை. எனி னும் ஒரு ஆறுதல். ஒரு சமயம் மாலாவின் கணவனே இந்த வண்டியில் வந்து வண்டி அடுத்து நிற்கப்போ கும் மாயவரத்தில தேடினுல். அவன் மாலாவை காண முடியாது. அதனுல் தானும் குற்றவாளியாக முடி யாது. அதற்குள் மாலா மறைந்துவிட்டது. தான் இனி நிரபராதி. இந்த களிப்பில் இருக்கிருன் மனோ கரன். இப்படியே இவனுக்குத் தோன்றும் எண்ணங் களின் வேகத்தைக் காட்டிலும் வேகமாக வண்டி மறுநாள் பிற்பகல் 2-6க்கு மண்டபம் வந்துநின்றுவிட் டது. ஸ்டேஷனில் வேலை செய்பவன் எல்லாரையும் இறங்கும்படி அறிவிக்கிருன். ''வண்டி இதற்குமேல் செல்லாது. பாம்பன் பாலம் பழுது பார்க்கப்படுகிறது

படகில் செல்லவேண்டும்; பக்கத்து ஸ்டேஷனில் வண்டி நிற்கும்; அதில் ஏறித்தான் பிரயாணம் செய்ய வேண்டும்.'' பார்த்தான் மனோகரன். இவ்வளவு நேரம் வண்டியில் வந்த களைப்புத்தீர படகில் செல்வதும் நல்லதுதான் என்று நடந்தான். தன்னிடம் மூட்டை முடிச்சுகள் ஒன்றுமில்லாததால் கைகளை வீசிக் கொண்டு நடந்தான், கடலூர் பழைய பட்டிணத்தில் தன் பங்குதாரன் கொடுத்த ஒரு ஜோடி புது வேஷ்டி ஒரு நூறு ரூபாய் நோட்டு, ஒரு கடிதம், அதிலுள்ள வாசகங்களைப் படித்ததும் கிழித்தெறிந்துவிட்டான். தனக்கென்று ஒரு தனி படகை அமர்த்திக்கொண்டான், படகோட்டி துடுப்புகளை அசைத்து படகை நடுத் தண்ணீருக்கு கொண்டுபோய்விட்டான்.

''படகோட்டி! உனக்கு விஞ்ஞானம் தெரியுமா?'' என்று மனோகரன் கேழ்க்கின்றான்.

''எனக்கென்னங்கோ தெரியும்! விடிஞ்சா போனா இந்த உத்தியோகம்தானுங்களே! எனக்கு'' என்று படகோட்டி பதில் சொல்கின்றான், ''அப்படியானால் உனக்கு கால் உயிர் போய்விட்டது'' என்று மனோகரன் பெருமையடித்துக்கொள்கிறான். படகு இன்னும் கொஞ்ச தூரம் நகர்ந்தது. மறுபடியும் மனோகரன் ''ஏய்! படகுக்காரா! உனக்கு கலை என்ன தெரியுமா? என்றான். கலை எனக்கென்ன தெரியும், இந்த கரைகள் இரண்டுதான் தெரியும் என்றான், ''அப்படியானல் உனக்குப் பாதி உயிர் போய்விட்டது என்றான், படகு இன்னும் கொஞ்சம் நகர்ந்தது. மறுபடியும் மனோகரன் படகுக்காரனைப் பார்த்துக் கேழ்க்கின்றான், 'படகோட்டி! உனக்கு உலக அமைப்புத் தெரி

யுமா? என்று. இந்த உப்புத் தண்ணியைத்தவிர எனக்கு உலகைப்பற்றி என்ன தெரியும்'' என்றான் படகோட்டி. 'அப்படியானால் உனக்கு முக்கால் உயிர் போய்விட்டது என்று விலா வெடிக்கச் சிரித்தான் மனோகரன்,

அதற்குள் படகும் ஓட்டை விழுந்து தண்ணீர் உள்ளே வர ஆரம்பித்தது. 'சாமி! உங்களுக்கு நீந்தத் தெரியுமா!' என்று கேட்டான் படக்கோட்டி. 'தெரியாதே!' என்றான் மனோகரன். அப்படியானால் உங்களுக்கு முழு உயிரும் போச்சி. ஆண்டவனைத் தியானித்துக் கொள்ளுங்கள் என்றான். படகும் தண்ணீரில் மூழ்கிவிட்டது. படகோட்டி நீந்திக் கறை சேர்ந்தான் எல்லாந் தெரிந்தும், நீந்தத்தெரியாத மனோகரன் நீரில் மூழ்கி மாண்டான். அதோடு முடிந்தது அந்தப் பாதகன் வாழ் நாள்.

கட்டுக்கடங்காத காதலியை கைவிட்ட மணி வேறோர் திருமணம் செய்துக்கொண்டான் இரண்டாண்டுகள் கழித்து. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு மனைவி கர்ப்பவதியானாள். இதற்கிடையில் மருத்துவ நிபுணரைப் பார்த்து சிகிச்சைப் பெற்றிருக்கிறான் எதற்காக என்பது வாசகர்களுக்கு நன்றாகத் தெரியும். கர்ப்பவதியான தன் மனைவியை ஆஸ்பத்திரியில் சேர்த்தான். ஒரு ஆண் குழந்தையை ஈன்றாள் முதல் பிரசவமானகயால், மிக வேதனைப்பட்டாள். உடனிருந்து உதவி செய்தாள் ஒரு நர்சு. அவள் அப்போதுதான் திருச்சியிலிருந்துகூடலூருக்குமாற்றப்பட்டிருக்கிறாள் மணியின் இரண்டாவது மனைவி மல்லிகாவை மிக அன்பாகப் பார்க்கிறாள். குழந்தையை எடுத்துக் கொஞ்சுகிறாள், யாருமில்லாதபோது குழந்தையைத்

தன் அறைக்குக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு அழுவாள். நோயாளியை அன்பாகப் பார்ப்பதுதான் முதல்தரமான மருந்து என்பதை புரிந்துக்கொண்டிருக்கின்ற சிலருக்கு இந்த நிகழ்ச்சி சாதாரணமாகப் பட்டது இதில் ஏதோ ரகசியம் அடங்கி இருப்பதாக யாருமே யூகித்தறிய முடியாத நேரம் அது. வாரத்தில் இரண்டு மூன்று முறைத் தன் கணவன் தன்னை வந்து பார்ப்பான். மல்லிகா தன்னைக் கவனிக்கும் நர்சின் அன்புள்ளத்தை அளவுகடந்து புகழ்வாள். தானும் காணவேண்டு மென்று விரும்புவான். வேலை நேர மாற்றத்தால் அது முடியாமல் போய்விட்டது. உடல் சரிப்பட்டு குழந்தையோடு வீட்டிற்கு வரும் நாள் கணக்குகள் தீர்ந்து பணத்தை ஆஸ்பத்திரி நிர்வாகிகளிடம் கொடுத்தாகிவிட்டது. "உன்னை அன்பாக பார்த்த நர்சுக்கு நாம் ஏதாவது சன்மானம்செய்ய வேண்டும்" நானே நேரில்பார்த்து, அந்தம்மையாரை வீட்டுக்கு வரும்படிச் சொல்ல எனக்கு வெட்கமாகயிருக்கிறது. நீயே பார்த்து ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கு வரவேண்டுமென்று சொல்லிவிட்டுவா! என்று தன் புது மனைவிக்குச் சொல்லுகிறான். அவளும் அப்படியே சொல்லிவிட்டு கணவனோடு வீட்டுக்குப்புறப்பட்டுவிட்டாள். மணியும் பழைய வீட்டில் இல்லை, வேறூர் பக்கம் புதிய வீடு கட்டியிருந்தான். அந்த விலாசம் இந்த நர்சுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. வருவதாக இவளும் ஒப்புக்கொண்டாள். யாரை சந்திக்கப்போகின்றோம் என்று இவளுக்கு ஏற்கனவே தெரிந்திருப்பதால், திகில் ஒரு பக்கம் வாட்டுகிறது. ஆயினும் போக துணிவு கொண்டு போய் விட்டாள். குறித்திருந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு.

இவளுக்கு ஏதாவது சன்மானம் அளிக்கவேண்டு மென்று நினைத்த மணி இரண்டு பவுன், சேலை, ஜாக் கெட்டு முதலானவைகளை எடுத்து வைத்திருக்கிறான்.

தெருவில் வண்டி வந்து நின்றது. உள்ளே நுழைந்தாள் நர்சு. பார்த்தான் மணி. பதறிப்போனான் தன் பழைய மனைவி மாலா—நர்சு உருவில் இருக்கும் நயவஞ்சகி. மீண்டும் தன் எதிரிலேயே வந்துவிட் டாள். சகிக்கமுடியாத அவமானம். சே! சே! இவள் முகத்தில் விழிப்பதா? முடியாது. வெளியேறச்சொல். ''மாலா! மீண்டும் என் எதிரில் தைரியமாக வருகின் றாயே, என்ன ஆணவம் உனக்கு. என்ன ஆனான் உன் மாஜிக் காதலன். உயிரோடிருக்கின்றானா, ஊதாரி போல் திரிகின்றானா? ஆண் என்று பாராமல் என்னை அவமானப்படுத்தினாயே'' ''சொம்மா போதீர்கள். நான் உம்மை வெறுக்கவில்லை'' நீர்தான் என்னை வெறுத்தீர். நானா உன்னை வெறுத்தேன்? சரி அப்ப டியே இருக்கட்டும். ஏன் வெறுத்தேன் தெரிமா? உன் பழைய காதலன் நினைவு உன்னைவிட்டுப்போக வில்லை என்பது எனக்குத்தெரியும். அதற்குக்காரணம் நீங்கள்தான் என்பதை இப்போதாவது ஒப்புக்கொள் கின்றீர்களா? இல்லை. நீ மனம் மாறவில்லை. நான் உன்னை நேசிக்கவில்லை. பொய்! ஒப்புக்கொள்ளமுடி யாதது, நீர் என்னை நேசிக்கவில்லை. நான் மனம் மாறவில்லை. கோழி முந்தியா? முட்டை முந்தியா? என்ற பிரச்னைக்கொப்பாகும். கல்யாணம் செய்தபின் பைத்தியம் தெளியுமா? பைத்தியம் தெளிந்த பின் கல்யாணம் செய்வதா? என்ற ஆராய்ச்சிக்கொப்பா கும். ஆண்டவன் முந்தியா? அவனை உண்டாக்கிய அடியார்கள் முந்தியா? என்ற சிக்கலுக்கு நேரானது

இந்த விவாதம், இனி நான் எதையும் தங்களிடம் யாசிக்கவில்லை. உங்களை எதிர்பார்த்து நான் வாழவுமில்லை. உங்கள் தற்கால மனைவியார் ஈன்ற குழந்தையைக்கண்டபோது, என்குழந்தையாயிருக்குமே என்ற உணர்ச்சி தோன்றியது. அதற்காக என் பார்வையில் இருந்தவரையிலும் பரிவும் பாசமுமாக வளர்த்தேன். உங்களிடம் தாயையும் சேயையும் ஒப்படைத்தேன், தாங்கள் என்னை வரச்சொன்னதாகச் சொன்னாள் தங்கள் மனைவி, உங்கள் வார்த்தைக்கு மதிப்பளித்து அழைப்பை ஏற்றுக்கொண்டு வந்தேன். வரவழைத்து வேண்டுமென்றே அவமானம் செய்கின்றீர்கள். உங்கள் சொத்தை அபகரிக்க நான் செய்த சூழ்ச்சி என்றெண்ணினீர்கள். அதையும் தங்கள் பேருக்கே எழுதி வைத்துவிட்டு வீட்டைவிட்டு வெளியேறினேன் என்பதும் உங்களுக்குத் தெரியும். ஏன்? ஒரு பெண் தவறான வழிகளில் நடக்க எண்ணுகிறாள் என்பதற்கு உங்களைத் தவிர எடுத்துக்காட்டு யாருமிருக்கமாட்டார்கள் என்பது என் துணிவு. என்னிடம் குற்றம் கண்ட நீங்கள் என்னை விலக்கியிருக்கலாம். இல்லையானால் உங்கள் அன்பெனும் திரையிட்டு, எனக்கிருந்த வெளியுலகப் பார்வையை மறைத்திருக்கலாம். அதையும் செய்யத்தவறிவிட்டீர்கள். ஒரு அபலையின் கெதியை நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பு ஆண்களிடம் ஒப்படைத்திருப்பதாக சமுதாயச் சட்டங்கள் சொல்லுவதால், தனக்கு நிகர் வேறு யாருமில்லை என நினைத்துக்கொண்டு தறுக்கோடு நடந்துக்கொள்ளும் ஆண்களுக்கு இனியாகிலும் புத்திவருமா என்று இன்னமும் சஞ்சலப்படுகின்றேன். மனமில்லாத என்னை தங்களோடு வாழவிட்ட வைதீக மனக்கோட்டையை

தகர்த்தெறிவதற்காக பொருள் வேண்டுமே என்பதற்காகத்தான் தங்களிடம் சொத்தை எழுதிவாங்கினேன் வாழமுடியாதநிலை ஏற்பட்டபோது, உங்களிடம்வீண் வழக்குத்தொடர்ந்துக் கொண்டிருப்பது உங்கள் கண்யத்தையே கெடுப்பதாகும என்று வெளியேறினேன்.

இதைக் கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்த மணியின் தந்தை மருதாசலம், 'ஆமாம் வழக்குத் தொடுத்தால் அவன்கண்ணியம் குறைந்துவிடும் என்ற பெரிய மனது வைத்து, வந்தவனேடு ஓடிவிட்டாய். அப்போது அவன் கண்ணியம் குறையவில்லை. மகாப் பதிவிரதா பாஞ்சாலி. ஏனடா அவளோடு பேசிக் கொண்டிருக்கின்ருய், மானமில்லை உனக்கு என்று பக்கத்தில் இருந்த கண்ணுடிக்கோப்பையைத் தூக்கி எறிந்தான். மணியின்மேல் விழவேண்டியதை, மாலா தாங்கிக்கொண்டாள். மண்டை பிளந்து விட்டது. மரணத்துக்குத் தயாராய் விட்டாள், "உங்களுக்கு நான் செய்த துரோகத்துக்கு இதோ என் ரத்த காணிக்கை" என்று சொல்லி வாய் மூடுவதற்குள் கண்களை மூடிவிட்டாள்.

நர்சு மாணிக்கவாசகம் வீட்டில் மணியால் கொல்லப்பட்டாள். ஊரார் உரையாடல். பத்திரிகை முகப்பில் கொட்டை எழுத்துச் செய்தி. நர்சு ஏன் அங்கு போனுள்? தெரியாது. இவளுக்கும் அவனுக்கும் என்ன சம்மந்தம்? தெரியாது. யார் கொன்றது? தெரியாது.

மணி கைதுசெய்யப்பட்டான். மாணிக்கவாசகம் ஜாமீனில்விடவேண்டினுன். ஜாமீன்மறுக்கப்பட்டது.

சிறையிலே மணி. வெளியிலே மாணிக்கவாசகம்.

வீட்டிலே மல்லிகா. தொட்டிலிலே குழந்தை.

## நீதி மன்றம்.

[குற்றவாளி கூண்டில் மணி நிற்கின்றான். நீதிபதி குற்றப்பத்திரிகைப் படிக்க]

சர்க்கார் வக்கீல்: கனம் நீதிபதியவர்களே! ஜூரர்களே. குற்றவாளிக் கூண்டில் நிற்கும் மணி என்பவன்-தன்னை நிரபராதி யென்றுகாட்ட நீலிக்கண்ணீர் வடிக்கிறான், குற்றத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள பலர் கையாளும் பலமுறைகளிலே முதல்தரமான முறை பலர் இறக்கங்காட்டுவதற்கு போகும் நல்ல மருந்து கண்ணீர்தான்! கொலைசெய்யப்பட்ட நர்சிடம் இவன் கள்ள எண்ணத்தோடு நெருங்கி இருக்க வேண்டும. சம்மதிக்காத நர்சை தந்திரமாக வீட்டுக்கழைத்து பலாத்காரம் செய்திருக்கவேண்டும். இணங்காமல் போகவே, கோபத்தால் கொலை செய்திருக்க வேண்டும். கட்டிய மனைவியைவிட்டு பலரிடம் நேசம் கொள்வதே இவன்வாழ்க்கையின் லட்சணமென்பதை இவன் பழைய கால சரித்திரம் சான்று கூறுகிறது.

மணி வக்கீல்: (இடைமறித்து) ஆதாரமெதுவுமில்லாமல் என் கட்சிக்காரனை பகிரங்கக்கோர்ட்டில் அவமானப்படுத்துவதை ஆட்சேபிக்கின்றேன்.

சர்க்கார் வக்கீல்: நண்பர் பலமாக ஆட்சேபிக்க வேண்டியதில்லை. லேசாக ஆட்சேபித்தாலே போதும். கனம் நீதிபதியவர்களே! குற்றவாளி மணிக்கு இப்போதிருக்கும் மனைவி இரண்டாந்தாரம். முதல்தாரம் என்ன ஆயிற்றென்று கேளுங்கள்.

மணி வக்கீல்: இறந்துவிட்டிருப்பாள்.

சர்க்கார் வக்கீல்: நண்பர் வக்கீலாக இருந்து, எப்போது ஜனன மாண கணக்கெழுதும் குமாஸ்தாவாக ஆனாரோ தெரியவில்லை. மணி! என்ன ஆனாள் உன் முதல் மனைவி? (மணி விழிக்கின்றான்)

சர்க்கார் வக்கீல்: தைரியமாகச் சொல்.

மணி: அவள்தான், இப்போது கொலை செய்யப்பட்டிருக்கும் நர்சு.

நீதிபதி: நம்ப முடியாது.

மணி: மன்னிக்கவும், சுமார் 9 ஆண்டுகட்கு மூன்பு...... (என்று கதையை சொல்லி முடித்தான்)

சர். வக்கீல்: இப்போது எங்கே அந்த மனோகரன்.

மணி: தெரியாது. இண்டோ சிலோன் எக்ஸ்பிரசில் அன்றிரவு சென்றதைப் பார்த்தேன், என் கைப்பட எழுதிய கடிதம் ஒன்று அவனிடம் இருந்தது இப்போது கொலை செய்யப்பட்ட நர்சிடமும் ஒன்றிருந்தது.

நீதிபதி: அந்த தேதி உனக்கு நினைவிருக்கிறதா.

மணி: ஆகஸ்டு கலவரம் தொடங்கிய நாள்!

நீதிபதி: சரி. வாய்தா அடுத்த 12ந் தேதி. மனோகரனுக்கு வாரண்டு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

கோர்ட் கலைவதற்குமுன்-இன்ஸ்பெக்டர் ஒருவர் சில ரிக்கார்டுகளோடு உள்ளே நுழைகிறார். பிரஸ்தாப வழக்குக்கும் தான் கொண்டுவந்திருக்கும் ரிக்கார்டுகளுக்கும் ஏதாவது சம்மந்தம் இருக்கக்கூடுமா என்று கடடளைப் பிறந்திருப்பதாகக் கூறி மீண்டும் வழக்கை ஆராய்ச்சி செய்யும்படி விண்ணப்பித்ததில்;

மனோகரன் சட்டைப் பையில் இருந்த மணியின் கையெழுத்திட்டக் கடிதம் அகப்படுவதால்-மனோகரன் நீந்தத் தெரியாததால் தண்ணீரில் மூழ்கி மாண்டு விட்டதையும், இப்போது இறந்துவிட்டவன் பேரில் வாரண்டு பிறப்பதில் பயனில்லை என்றும் கோர்ட்டார் முடிவுசெய்து.

இறந்துவிட்ட நர்சு கொள்ளிடத்தில் விழுந்து மீன் பிடிப்போர் உதவியால் கரைசேர்ந்து திருச்சியில் நர்சு வேலைப்பழகி, பிறகு கூடலூருக்கு மாற்றப்பட்டவன்தான் என்று நிர்ணயிப்பதற்குண்டான ஆதாரங்

கள், அவள் வேலை பார்த்த ஆஸ்பத்திரியில் போட்ட கையெழுத்தும், தன் பேரில் தன் கணவன் எழுதி வைத்திருந்த சொத்துக்களைத் திருப்பித்தன கணவனுக்கே எழுதி வைத்த பத்திரத்தில் போட்ட கையெழுத்தும் ஒத்திருப்பதால், கொலைசெய்யப்பட்ட மாலா தான் நர்சு உருவத்தில் இருந்த, மணியின் முதல்தாரமென்றும், அவள் வேறோர் கள்ளக் காதலனோடு போகும்போது தாராளமாக மன்னித்து சன்மானமும் வழங்கி வழியனுப்பிய மணி, இப்போது கொலைசெய்திருக்க முடியாதென்றும், ஆத்திரம் எழும்பியிருக்க வேண்டிய நேரத்திலெல்லாம் அமைதியாக நடந்துக்கொண்ட மணி, இப்போது கொலைக்காரனாகமாற எந்தவித நியாயமும் இல்லையென்றும், ஆனால் உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடிப்பதும், அல்லது போதிய சாட்சியங்கள் இல்லாமல், கொலை செய்யாத ஒருவன் தன் சொந்தக்காரர்களை, அல்லது உண்மையான குற்றவாளியைக் காப்பாற்றி விடுவதற்காக தானே கொலை செய்ததாக ஒப்புக்கொண்டாலும் தானே கொலைசெய்து உண்மைக் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிற உண்மையான குற்றவாளியா இருந்தாலும், போதிய சாட்கியங்கள் இல்லாமல், குற்றத்தை சுமத்தித் தண்டனையளிக்க தற்கால சட்டங்கள் அனுமதிக்காததால் என்ன செய்வதென்று நீதிமன்றம் சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் தான்.

குற்றம் செய்யாத தன் கணவனைக் குற்றவாளியாக்கி, மாமனாரை உயிர்வாழ வைக்க எண்ணாத மல்லிகா-உண்மையைச் சொல்லிவிடுகிறாள். மணி மன்னிக்கப்படுகிறான். மாணிக்கவாசகத்துக்குத் தூக்குத் தண்டனை. சோகம் இவ்வளவு பேரையும் சுற்றித் திரிந்து வாழ்வைக் கெடுத்து, வஞ்சந்தீர்ந்து வாகை மாலை சூடிக்கொண்டு அடுத்தவரை குறிப்பார்த்து நிற்கிறது. 68306

★★★